1973, மார்ச் 13]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பொதுவாக, கள்ள நோட்டு வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களுக்கு இப்போது இருக்கும் தண்டனை குறைவாக இருக்கிறது, அதை அதிகப்படுத்தினால் அந்தக் காரியங்களில் ஈடுபடுகிறவர்கள் அந்தக் காரியத்தில் ஈடுபடமாட்டார்கள் என்ற கருத்து நிலவுகிறது. ஏற்கனவே யாரோ பி. கிளாசில் இருப்பதாகச் சொன்னார்கள். அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இப்படிப்பட்ட கள்ளநோட்டு அச்சடிப்பவர்களுக்குக் குறைந்த கால தண்டனை இருப்பதால்தான், இந்தக் குற்றம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்று முதலைமச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே, இப்படிப்பட்ட குற்றம் செய்பவர்களுக்குத் தூக்கு தண்டனை விதிக்க வேண்டுமென்று அந்தச் சட்டத்தை மாற்றியமைக்க அரசு சிபார்சு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 10 ஆண்டு காலம் 20 ஆண்டு காலம் தண்டனையாக்க வேண்டுமென்று கருத்து இருக்கிறது. அது நிறைவேற்றப்பட்டாலே போதுமானது.

Educational concessions to children of Repatriates from Burma and Ceylon.

*** 343 Q.**—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the details of the concessions given to the children of the repatriates from Burma and Ceylon for admission into (1) Engineering (2) Medical and (3) other colleges ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அயல்நாட்டிலிருந்து இந்தியாவுக்குத்திருப்பி அனுப்பப்பட்டவர்களுக்கென மாநில முழுவதற்கும் பொறியியல் கல்லூரியில் இரு இடங்களும், மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரை இலங்கையிலிருந்து திரும்பியவர்களுக்கு இரு இடங்களும், பர்மாவிலிருந்து மீண்டவர்களுக்கு நான்கு இடங்களும், ஏனைய கலைக் கல்லூரிகளைப் பொறுத்தவரை ஒவ்வொரு அரசினர் கல்லூரியிலும் புகுமுக வகுப்பில் இரண்டு இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. மற்ற பட்டப் படிப்புகளிலும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைத் தவிர மதுரை, நாகர்கோவில், தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள பல்தொழில் நுட்பக் கல்லூரிகளில் ஆதாரப் பொறியியற் கல்வி பட்டயப் படிப்புக்கு ஒரு இடம் 1972–73 ஆண்டில் ஒதுக்கப்பட்டது.

திரு. ஆ. பரந்தாமன்: துணைத் தலைவரவர்களே, பர்மாவிலிருந்து வருகின்ற மாணவர்களுடைய கல்வித் தகுதிகள் தமிழ்நாட்டுக் கல்வித் தகுதியோடு முறையோடு ஒத்து வருகிறதா, இல்லையென்றால், எந்த அடிப்படையில் அவர்கள் சேர்க்கப்படுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஒத்து வருகின்ற அடிப்படையில்தான் இங்கே பல்வேறு வகுப்புகளில் தேர்ந் தெடுக்கப்படுகிறார்கள். அதற்கான தகுதியைப் பெறவில்லையென்றால், அவ்வாறு பெற்றதற்குப் பின் தான் சேர்ப்பார்கள்.

திரு ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, சில இடங்களில் ஒதுக்கப்பட் டுள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒதுக்கப்பட்ட இடங்களில் மாணவர்கள் சேர்ந்து இருக்கிறார்களா அல்லது அந்த இடங்கள் காலியாக இருக்கின்றனவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எனக் குத் தெரிந்த வரையில் மாணவர்கள் சேர்ந்து கொண்டு இருக்கிறார்கள். ஒதுக்கப்பட்டுள்ள இடம் காலியாக இருக்கிறதா என்ற விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. த. சோலையா : தலைவரவர்களே, தமிழ்நாட்டை விட்டு வெளி நாட்டிற்குச் சென்று வாழ முடியாமல் இன்று தாயகம் திரும்பி வருகிற வர்களுக்குப் பொறியியல் கல்லூரியிலும், மருத்துவக் கல்லூரியிலும் 1—2 இடங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அடுத்த ஆண்டிலிருந்து கூடுதலாக இடம் ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பல் வேறு பிரச்னைகள், அவர்களுடைய எண்ணிக்கை, விண்ணப்பங்கள், மற்ற வசதிகள், சூழ்நிலைகள் இவைகளை ஆராய்ந்தபின் தான் இடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

திரு. வை. பாலசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, இப்படி அங்கே இருந்து வரும் மாணவர்களில் சிலருக்குத் தமிழே தெரியவில்லை என்று சொல்கிறார்கள். அப்படி தமிழ் தெரியாதவர்களுக்கு முறையாக தமிழ் கற்றுக்கொடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழைக் கற்றுக் கொள்வதற்குப் பல்வேறு வசதி, வாய்ப்புகள் இருக்கின்றன. அதைப் பயன்படுத்தி அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். அப்படி அங்கே யிருந்து வருகிறவர்கள் இங்கே வந்து தமிழ் கற்றுக்கொள்ள முடியாத வர்களாக இருந்தால், ஆங்கிலத்தில் சிலபல பள்ளிகளில் பயிற்சி இருப்ப தால், அதிலே சேர்ந்துகொள்ள வாய்ப்பு இருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்த பர்மா, சிலோன அகதிகளின் குழந்தைகளுக்குத் தற்போது ஒதுக்கப்பட்டிருக்கிற சீட்டுகள் குறைந்த அளவில் இருக்கின்றன. ஆகவே, ஏற்கனவே இரண்டு சீட் ஒதுக்கப்பட்டிருந்தால் இன்னொரு சீட் அதிகமாக்கி 3 சீட்டாகவும், ஒரு சீட் ஒதுக்கி இருந்தால் அதை இரண்டு சீட்டாக ஆக்கவும் அரசு முன் வருமா?

1973 மார்ச் 13]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அந்தந்தக் கல்வித் துறைக்கு அவர்கள் விண்ணப்பித்தால், அந்தந்தக் கல்வித் துறை அது குறித்து இன்னும் ஒதுக்கலாம். சர்வகலாசாலையில் அதிக இடம் ஒதுக்க சங்கடம் இருக்காது. மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி ஆகியவற்றிற்கு அவர்கள் விண்ணப்பித்தால், அவர்கள் நிலைமைகளை ஆராய்ந்து அதற்கு ஏற்ப முடிவு எடுக்கலாம்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, தாயகம் திரும்பிய பர்மா, இலங்கை அகதிகளுக்கு இப்போது கல்லூரிகளில் அளிக்கப்படுகின்ற இடங்களை அதிகப்படுத்துவதோடு, அவர்களுக்குப் பணமாக உதவி செய்வதற்கும் அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறதா? அப்படியில்லையென்றால், அதைச் செய்து தருவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, எனனைப் பொறுத்தவரையில், கல்வித் துறையில் என்னென்ன வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன என்பதுதான் தெரியும். அவர்களுக்குப் பொருளாதார வசதிகள், மற்ற மற்ற வசதிகள் எல்லாம் அதற்கென்று இருக்கும் துறைகளில் கவனிக்கப்பட்டு வருகின்றன. அந்தத் துறைகள் சில பல வசதிகளைச் செய்து தருகின்றன.

வேலம்பாளையத்திலுள்ள தனியார் பள்ளி.

*344 வினா:—திரு சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1971-ம் ஆண்டில், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட 15 வேலம்பாளையத்தில் உள்ள தனியார் பள்ளியை அரசு பள்ளியாக மாற்ற வேண்டும் எனக் கேட்டு பேரூராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

மனிதச் சக்தியைப் பயன்பெறும் திட்டத்தின்கீழ் பணிகள்.

*345 வினா:—திரு நா. வெ. குருசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 70-71, 71–72-ம் ஆண்டுகளில் மனிதச் சக்தியைப் பயன்பெறும் திட்டத்தின்கீழ் (R.M.P.) வேலை எதேனும் மேற்கொள்ளப்பட்டதா?